## 2. ஆகமங்கள் புகழ்

1. ஆகமங்கள் புகழ் வேதா நமோ நமோ
வாகு தங்கு குரு நாதா நமோ நமோ
ஆயர் வந்தனைசெய் பாதா நமோ நமோ –
அருருபா

2. மாகமண்டல விலாசா நமோ நமோ
மேகபந்தியி னுலாசா நமோ நமோ
வான சங்கம விஸ்வாசா நமோ நமோ –
மனுவேலா

3. நாகவிம்பம் உயர் கோலா நமோ நமோ
காகமும் பணிசெய் சீலா நமோ நமோ
நாடும் அன்பர் அனுகூலா நமோ நமோ –
நரதேவா

4. ஏக மந்த்ரமுறு பூமா நமோ நமோ
யூக தந்த்ரவாதி சீமா நமோ நமோ
ஏசு வென்ற திருநாமா நமோ நமோ –
இறையோனே

## 3. வாரும் ஐயா போதகரே

1. வாரும் ஐயா போதகரே
வந்தெம்மிடம் தங்கியிரும்
சேரும் ஐயா பந்தியினில்
சிறியவராம் எங்களிடம் – வாரும்

2. ஒளிமங்கி இருளாச்சே
உத்தமனே, வாரும் ஐயா
கழுத்திரவு காத்திருப்போம்
காதலனே கருணை செய்வாய் – வாரும்

3. நான் இருப்பேன், நடுவில் என்றாய்
நாயன் உன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயை புரிய
தற்பரனே, நலம் தருவாய் – வாரும்

4. உன்றன் மனை திருச்சபையை
உலக மெங்கும் வளர்த்திடுவாய்
பந்தமறப் பரிகரித்தே
பாக்யம் அளித் தாண்டருள்வாய் – வாரும்



## 4. வரவேணும் எனதரசே

பல்லவி
வர வேணும், என தரசே, மனுவேல், இஸரேல் சிரசே.
அனுபல்லவி
அருணோ தயம் ஒளிர் பிரகாசா,
அசரீரி ஒரே சரு வேசா! – வர
சரணங்கள்
1. வேதா, கருணா கரா, மெய்யான பரா பரா,
ஆதார நிராதரா, அன்பான சகோ தரா,
தாதாவும் தாய் சகலமும் நீயே;
நாதா, உன் தாபரம் நல்குவாயே. – வர

2. படியோர் பவ மோசனா, பரலோக சிம்மாசனா,
முடியா தருள் போசனா, முதன் மா மறை வாசனா,
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்,
இமையவர் அடி தொழு மேன்மையின் எந்தாய், – வர

3. வானோர் தொழும் நாதனே, மறையாகம போதனே,
கானாவின் அதீதனே, கலிலேய வினோதனே,
ஞானாகரமே, நடு நிலை யோவா,
நண்பா, உனது நன்மையின் மகாதேவா! – வர

## 5. நம்பிவந்தேன் மேசியா நான் நம்பிவந்தேனே

நம்பிவந்தேன் மேசியா நான் நம்பிவந்தேனே - திவ்ய
சரணம் சரணம் சரணம் ஐயா நான்
நம்பிவந்தேனே

1. தம்பிரான் ஒருவனே தம்பமே தருவனே -வரு
தவிது குமர குரு பரமனுவேலே
நம்பிவந்தேனே

2. நின்பாத தரிசனம் அன்பான கரிசனம் நித
நிதசரி தொழுவ திதம் எனவும் உறுதியில்
நம்பிவந்தேனே



3. நாதனே கிருபைகூர் வேதனே சிறுமைதீர் அதி
நலம் மிகும் உனதிரு திருவடி அருளே
நம்பிவந்தேனே

4. பாவியில் பாவியே கோவியில் கோவியே கன
பரிவுடன் அருள்புரி அகல விடாதே
நம்பிவந்தேனே

5. ஆதி ஓலோலமே பாதுகா காலமே உன
தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த
நம்பிவந்தேனே

## 6. ஆமென் அல்லேலூயா

ஆமென் அல்லேலூயா!
ஆமென் அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா,
ஆமென் அல்லேலூயா! ஜெயம்! ஜெயம்!
அனந்த ஸ்தோத்திரா

ஓம் அனாதி தந்தார் வந்தார் இறந்
துயிர்த் தெழுந்தாரே உன்னதமே! – (ஆமென் அல்லேலூயா)
1. வெற்றிகொண்டார்ப் பரித்து – கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து – முறித்து
பத்ராசனக் கிறிஸ்து – மரித்து
பாடுபட்டுத்தரித்து முடித்தார் – ஆமென்

2. சாவின் கூர் ஒடிந்து – மடிந்து
தடுப்புச் சுவர் இடிந்து – விழுந்து
ஜீவனே விடுத்து – தேவாலயத்
திரை இரண்டாய்க் கிழிந்து – ஆமென்

3. வேதம் நிறைவேற்றி – மெய் தோற்றி
மீட்டுக் கரையேற்றி – பொய் மாற்றி
பாவிகளைத் தேற்றி – கொண்டாற்றி
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார் – ஆமென்

## 7. ரனே திருக்கடைக்கண் பாராயோ

பரனே, திருக்கடைக்கண் பாராயோ?
பல்லவி

பரனே, திருக்கடைக்கண் பாராயோ?-என்றன்
பாவத்துயர் அனைத்தும் தீராயோ?
சரணங்கள்
1. திறம் இலாத எனை முனியாமல்,-யான்
செய்த குற்றம் ஒன்றும் நினையாமல். – பரனே

2. மாய வலையில் பட்டுச் சிக்காமல்,-லோக
வாழ்வில் மயங்கி மனம் புக்காமல். – பரனே

3. அடியேனுக் கருள் செய் இப்போது,-உன
தடிமைக் குன்னை அன்றிக் கதி ஏது? – பரனே

4. வஞ்ச கவலை கெடுத் தோட்டாயோ?-என்றன்
மனது களிக்க வர மாட்டாயோ? – பரனே

5. ஏசுவின் முகத்துக் காய் மாத்ரம்-எனக்
கிரக்கம் செய்யும்; உமக்கே தோத்ரம்! –
பரனே

## 8. ராச ராச பிதா

ராச ராச பிதா மைந்த தேசு லாவுசதா நந்த
யேசு நாயகனார் சொந்த மேசியா நந்தனே (2)
ஜெகதீசு ரேசுரன் சுக நேச மீசுரன் மக – ராச

1. மாசிலா மணியே மந்த்ர ஆசிலா
அணியே,சுந்தர
நேசமே பணியே, தந்திர மோசமே தணியே (2)
நிறைவான காந்தனே இறையான சாந்தனே!
மறை – ராச

2. ஆதியந்த மில்லான் அந்த மாதினுந்தியிலே,
முந்த
வேத பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே,
பத ஆமனாமனா (2) சுதனாமனாமனா சித –
ராச

3. வீடு தேடவுமே, தந்தை நாடு கூடவுமே,
மைந்தர்
கேடு மூடவுமே, விந்தையோடு பாடவுமே (2)
நரவேட மேவினான், சுரராடு கோவினான், பர –
ராச

## 9. சோபனமே

சோபனமே, சோபனமே
சோபன பெண்காள் சோபனமே
தீப ஞான ஸ்நான பிரதாப
தேவதை பெண்காள் சோபனமே

1. சங்கை மனாளர்க்கு சோபனம் சோபனம்
தவிது மைந்தர்கு சோபனம் சோபனம்
எங்கள் அரசர்கு சோபனம் சோபனம்
இயேசு நாதர்கு சோபனம் சோபனம் -
சோபனமே

2. ஆட்டு குட்டிக்கு சோபனம் சோபனம்
அவர் மனைவிக்கு சோபனம் சோபனம்
தேட்ட கணவர்க்கு சோபனம் சோபனம்
செல்வ குமாரிக்கு சோபனம் சோபனம் —
சோபனமே

## 10. சீர் ஏசு நாதனுக்கு

சீர் இயேசு நாதனுக்கு ஜெயமங்களம் - ஆதி
திரியேக நாதனுக்கு சுபமங்களம்

பாரேறு நீதனுக்கு பரம பொற்பாதனுக்கு
நேரேறு போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு – சீர்

1. ஆதி சரு வேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்
அகிலப் பிர காசனுக்கு, நேசனுக்கு மங்களம்
நீதி பரன் பாலனுக்கு , நித்திய குணாலனுக்கு,
ஓதும் அனுகூலனுக்கு , உயர் மனுவேலனுக்கு ---
சீர்

2. மானாபி மானனுக்கு , வானனுக்கு மங்களம்
வளர் கலைக் கியானனுக்கு , ஞானனுக்கு
மங்களம்
கானான் நல் தேயனுக்குக் கன்னி
மரிசேயனுக்கு,
கோனார் சகாயனுக்கு கூறு பெத்த லேயனுக்கு -
-- சீர்

3. பத்து லட்ச ணத்தனுக்குச் சுத்தனுக்கு
மங்களம்
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்
சத்திய விஸ்தாரனுக்குச் சருவாதி காரனுக்கு,
பத்தர் உப காரனுக்குப் பரம குமாரனுக்கு --- சீர்

St. Bede
100 Years
Est. 1924
Anglican Church, Toronto
https://stbedesanglican.ca/

**Clement Sasthriyar Concert**
April 26, 2025
Markham Chinese Alliance Church
1 Chatelaine Dr., Markham, ON L3S 3S9

## *1.ஆதியும் அந்தமும்*

1. ஆதியும் அந்தமும் இல்லா சரணம்
அதுமுன் அதுமுன் அதுமுன் சரணம். -2
அல்பா ஒமேகாவே சரணம்-2
அடியார் நடுவே முடிவே சரணம்-2

2. மாதர்கள் மைந்தர்களில்லாய் சரணம்
மானுடவதார குமார சரணம்
மாசில்லாத மணியே சரணம்
மன்னா பொன்னா மின்னா சரணம்

3. ஜாதி ஜனங்களில்லாய் சரணம்
தானா வானா ஞானா சரணம்
சர்வ வியாபி சர்வ வல்லபனே
சரணம் சருவேசுரனே சரணம்

4. ஏதம் ஏதும் இல்லாய் சரணம்
இறையே நிறையே பொறையே சரணம்
எனை மீண்டவனே எனை ஆண்டவனே
இயேசு நாதா சரணம் சரணம்